## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.151/மா/2024
நாள் 28.11.2025

P. சோழராஜா
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்
மண்டலம் 14
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சென்னை, வில்லிவாக்கம், வடக்கு ரெட்ஹில்ஸ் ரோடு, கதவு எண் 129/101 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. சோழராஜா என்பவரின் 10.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2024 அன்று பெறப்பட்டு 151/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, வில்லிவாக்கம், வடக்கு ரெட்ஹில்ஸ் ரோடு, கதவு எண் 129/101 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. சோழராஜா என்பவர் 10.08.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“நான், சென்னை–600 008, எண் 22/488 பாந்தியன் சாலையில் இயங்கும் நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கம் மற்றும் சங்கம் நடத்தும் கொட்டிவாக்கத்தில் இயங்கும் 2 பள்ளிக்கும் ஆயுட்கால உறுப்பினராக உள்ளேன். எனது உறுப்பினர் எண் 3750 ஆகும்.

எங்கள் சங்கத்தில் 18,000 உறுப்பினர்கள் உள்ளனர். 2003– 2004–ஆம் ஆண்டு வரை சங்கம் மற்றும் நெல்லை நாடார் மெட்ரிக்குலேஷன் பள்ளியை மட்டும் திரு. S. ராமச்சந்திர நாடார் அவர்கள் 1 மாடிக்கு பஞ்சாயத்து போர்டில் அப்ரூவல் பெற்று பள்ளியை சிறப்பாக நடத்தி வந்தார்கள்.

2008 ஆம் ஆண்டுக்கு பிறகு பதவிக்கு வந்த சங்க நிர்வாகிகள் சென்னை மாநகராட்சி மற்றும் CMDA அலுவலகத்தில் எவ்வித கட்டிட வரைபடம் பில்டிங் பிளான் அப்ரூவல் இல்லாமல் பள்ளி கட்டிடத்தின் மீது மேலும் ரெண்டுமாடி கட்டிடம் கட்டியும் பள்ளி கட்டிடம் கட்டுவதாக இருந்தால் கட்டிடத்தை சுற்றி 20 அடி இடைவெளி விடாமல் கட்டிடம் கட்டியும் படிக்கும் மாணவர்களுக்கு காற்றோட்ட வசதி இல்லாமல் பெரிய செட் அமைத்து இருந்தார்கள். அந்த செட் அமைத்ததற்கும் பெருநகர சென்னை மாநகராட்சியில் எவ்வித பில்டிங் பிளான் அப்ரூவலும் வாங்காமல் பள்ளி கட்டிடம் கட்டி அந்த பள்ளியில் 4000 மாணவர்கள் படித்து வருகிறார்கள். அவர்கள் உடமை மற்றும் உயிருக்கும், சங்க நிர்வாகிகள் தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதால் நான் சங்க கட்டிடம் மற்றும் பள்ளி

கட்டிடம் குறித்து (CMDA) மெம்பர் செக்கரெட்ரி அவர்களுக்கு விரிவான புகார் பள்ளி கட்டிட போட்டோ உடன் அனுப்பினேன்.

திரு. உறுப்பினர் செயலாளர் அவர்கள் (CMDA) வளர்ச்சி குழுமத்தில் பள்ளி கட்டிடத்திற்கு பில்டிங் பிளான் அப்ரூவல் வாங்கவில்லை. எனவே பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 அலுவலர் அவர்களுக்கு நடவடிக்கைக்காக (CMDA) திரு. உறுப்பினர் செயலாளர் அனுப்பினார்கள். அவர்கள் இதுநாள் வரை கட்டிடம் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2017ம் ஆண்டு ராமச்சந்திரன் பப்ளிக் பள்ளி (CBSC) 4 மாடி கட்டிடம் கட்டினார்கள். கட்டிடத்திற்கு CMDA அலுவலகத்திலும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்திலும் எவ்வித பில்டிங் அப்ரூவலும் வாங்காமல் 4 மாடி கட்டிடம் கட்டி அந்த பள்ளியில் சுமார் 4000 மாணவர்கள் படித்து வருகிறார்கள். பெருநகர மாநகராட்சி பில்டிங் பிளான் இல்லாமல் 4 லிப்ட் அனுமதி இல்லாமல் லிப்ட் அமைத்து இருக்கிறார்கள். நாளை பெரிய விபத்து நடந்தால் மாணவர்கள் தான் பாதிப்பு அடைவார்கள்.

சங்க நிர்வாகத்தினரிடம் பள்ளிக்கு பிளான் வாங்கினீர்களா என்று கேட்டதற்கு பிளான் வாங்கி தான் பில்டிங் கட்டுகிறோம் என்று சங்க உறுப்பினர்களிடம் பொய் சொல்லி சுமார் 36 கோடி ரூபாய் மோசடி செய்து பொய் கணக்கு காட்டியுள்ளார்கள்.

அதேபோல் இரண்டு பள்ளிக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி வரி வருவாய் பிரிவில் கட்டிட வரி இரண்டு பள்ளிக்கும் 6 மாத வரி சுமார் 3,06,221/– லட்சம் 2005 ஆம் ஆண்டு முதல் கட்டாமல் இருந்து வருகிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் CMDA அலுவலகத்திற்கு பல லட்சங்கள் சேர வேண்டிய வளர்ச்சி கட்டணத்தை செலுத்தாமல் சங்க நிர்வாகிகள் மோசடி செய்துள்ளார்கள். அந்த மோசடிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் உடந்தையாக இந்த நாள் வரை செயல்பட்டு வருகிறார்கள். தாங்கள் கட்டிடம் அப்ரூவல் பெற்று பள்ளி நடத்தும் படியும் நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கோடிக்கணக்கில் வருமானம் கிடைக்கும் என்பதை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 24.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 28.10.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 28.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"நான், சென்னை–600 008, எண் 22/488 பாந்தியன் சாலையில் இயங்கும் நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கம் மற்றும் சங்கம் நடத்தும் கொட்டிவாக்கத்தில் இயங்கும் 2 பள்ளிகளும் ஆயுட்கால உறுப்பினராக உள்ளேன். எனது உறுப்பினர் எண் 3750 ஆகும்.

2003–2004–ஆம் ஆண்டு வரை சங்கம் மற்றும் நெல்லை நாடார் மெட்ரிக்குலேஷன் பள்ளியை மட்டும் திரு. S. ராமச்சந்திர நாடார் அவர்கள் ஒரு மாடிக்கு பஞ்சாயத்தில் அப்ரூவல் பெற்று பள்ளியை சிறப்பாக நடத்தி வந்தார்கள்.

2008 ஆம் ஆண்டுக்கு பிறகு பதவிக்கு வந்த சங்க நிர்வாகிகள் சென்னை மாநகராட்சி மற்றும் CMDA அலுவலகத்தில் எவ்வித கட்டிட வரைபடம் பில்டிங் பிளான்

அப்ரூவல் இல்லாமல் பள்ளி கட்டிடத்தின் மீது மேலும் ரெண்டு மாடி கட்டிடம் கட்டியும் கட்டிடத்தை சுற்றி 20 அடி இடைவெளி விடாமலும் படிக்கும் மாணவர்களுக்கு காற்றோட்ட வசதி இல்லாமல் பெரிய செட் அமைத்து இருந்தார்கள். அந்த செட் அமைத்தற்கும் பெருநகர சென்னை மாநகராட்சியில் எவ்வித பில்டிங் பிளான் அப்ரூவலும் வாங்காமல் பள்ளி கட்டிடம் கட்டி அந்த பள்ளியில் 4000 மாணவர்கள் படித்து வருகிறார்கள். அவர்கள் உடமை மற்றும் உயிருக்கும், சங்க நிர்வாகிகள் தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதால் நான் சங்க கட்டிடம் மற்றும் பள்ளி கட்டிடம் குறித்து CMDAக்கு விரிவான புகார் பள்ளி கட்டிட போட்டோ உடன் அனுப்பினேன்.

பெருநகர வளர்ச்சி குழுமத்தில் பள்ளி கட்டிடத்திற்கு பில்டிங் பிளான் அப்ரூவல் வாங்கவில்லை என்பதால் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 அலுவலர் அவர்களுக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. ஆனால் இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2017ம் ஆண்டு ராமச்சந்திரன் பப்ளிக் பள்ளி (CBSC) கட்டிடத்திற்கு CMDA அலுவலகத்திலும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்திலும் எவ்வித பில்டிங் அப்ரூவலும் வாங்காமல் 4 மாடி கட்டிடம் கட்டியுள்ளார்கள். அந்த பள்ளியில் சுமார் 4000 மாணவர்கள் படித்து வருகிறார்கள். பெருநகர மாநகராட்சி பில்டிங் பிளான் இல்லாமல் 4 லிப்ட் அனுமதி இல்லாமல் லிப்ட் அமைத்து இருக்கிறார்கள். நாளை பெரிய விபத்து நடந்தால் மாணவர்கள் தான் பாதிப்பு அடைவார்கள்.

இரண்டு பள்ளிக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி வரி வருவாய் பிரிவில் கட்டிட வரி இரண்டு பள்ளிக்கும் 6 மாத வரி சுமார் ரூ.3,06,221/– லட்சம் 2005 ஆம் ஆண்டு முதல் கட்டாமல் இருந்து வருகிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் CMDA அலுவலகத்திற்கு பல லட்சங்கள் சேர வேண்டிய வளர்ச்சி கட்டணத்தை செலுத்தாமல் சங்க நிர்வாகிகள் மோசடி செய்துள்ளார்கள். அந்த மோசடிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் உடந்தையாக இந்த நாள் வரை செயல்பட்டு வருகிறார்கள். எனவே, நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் திறந்த வெளியில் ஆடிட்டோரியம் கட்டி இருந்தார்கள். அந்த ஆடிட்டோரியம் முழுவதும் பள்ளி வகுப்பறைகளுக்கு காற்றோட்ட வசதியில்லாமல் தரை பகுதியில் பெரிய செட் அமைத்து இருக்கிறார்கள். அந்த பெரிய செட்டை அப்புறப்படுத்த வேண்டும். அதேபோல் பள்ளி மேல் மாடியில் அமைந்துள்ள செட்டை அப்புறப்படுத்துமாறும், உத்தரவு பிறப்பிக்கும்படியும் தாழ்மையுடன் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.''

5. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் இளநிலை பொறியாளர் 28.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“இன்றைய நேர்முக விசாரணையில் திரு. P.சோழராஜா அவர்களின் மனுவின் விசாரணையின்படி கீழ்க்கண்டவாறு தகவல் அளிக்கிறேன்.

(1) கோட்டம்–181/மண்டலம் 14–ல் கொட்டிவாக்கம் பகுதியில் நெல்லை நாடார் சங்க பள்ளி வளாகத்தில் கடந்த 2005 ஆம் ஆண்டு பஞ்சாயத்து காலத்தில் கட்டிட அனுமதியுடன் பிளாக் A, பிளாக் B, பிளாக் C, மற்றும் பிளாக் D என கட்டிடங்கள் கட்டப்பட்டது. இதன் மீது வந்த புகாரை தொடர்ந்து 26.07.2023 அன்று கட்டிட அனுமதி நகல் வேண்டி தாக்கீது வழங்கப்பட்டது.

(2) பள்ளி வளாகத்தின் நடுவில் காம்பவுண்ட் சுவர் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ளது.

(3) அனுமதி வாங்கி கட்டப்பட்ட பள்ளி கட்டிடத்தில் பிளாக் A மற்றும் பிளாக் D என இரண்டு கட்டிடத்தின் மூன்றாம் தளம் அனுமதி இல்லாமல் தற்காலிக இரும்பிலான கூரை கட்டப்பட்டுள்ளது. மேற்கூறிய அனைத்து புகார்களுக்கும் மேல் நடவடிக்கையாக 17.10.2023 அன்று Lock & seal and Demolition தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. இந்த தாக்கீதை எதிர்த்து பள்ளி நிர்வாகம் 15.12.2023 அன்று தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி கழகத்தின் (HUD) விசாரணையின் ஆணை 28.01.2025 அன்று பெறப்பட்டது. (HUD) ஆணையின்படி பெறப்பட்ட விவரம் நகல் இணைக்கிறேன்.

(4) நெல்லை நாடார் மேல்நிலைப் பள்ளி மற்றும் ராமச்சந்திரா பள்ளியின் (CBSE) சொத்து வரி சம்பந்தமாக மண்டலம் 14–ன் உதவி வருவாய் அலுவலர் அவர்கள்தான் பதில் தர இயலும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்14ன் உதவி வருவாய் அலுவலர் தனது 04.11.2025 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு பதிலினை சமர்ப்பித்துள்ளார்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள எண்:322/488, பாந்தியன் சாலை விலாசத்தில் இயங்கும் நெல்லை தூத்தூக்குடி நாடார் மகிமை சங்கம் நடத்தும் கதவு எண்:3/590, லக்ஷ்மண பெருமாள் நகர், கொட்டிவக்கம், சென்னை–600041 நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலை பள்ளி மீது பெறப்பட்ட புகார் மனுவிற்கு கீழ் கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது,

1. நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலை பள்ளி நிர்வாகம் கட்டிடம் கட்ட கடந்த பஞ்சாயத்து காலத்தில் 2005–2006 ஆண்டில் பள்ளி கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி வரைபடத்தில் பிளாக்–A, பிளாக்–B, பிளாக்–C மற்றும் பிளாக்–D என நான்கு கட்டிடங்கள் கட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது, கட்டபட்ட கட்டிடத்தில் பிளாக்–A மற்றும் பிளாக்–D தரை தளம்+2 தளத்திற்கு கட்டிடம் கட்ட அனுமதி வாங்கபட்டுள்ளது, ஆனால் அனுமதி இல்லாமல் மூன்றாவது தளம் இரும்பு கூரையுடன் தற்காலிக உபயோக தளம் (TEMPORARY SHED) அமைக்கப்பட்டுள்ளது.
2. நெல்லை நாடார் மேல்நிலைப்பள்ளி மற்றும் இராமச்சந்திரா (CBSC) பள்ளி வளாகத்திற்கு இடையே மதில் சுவர் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ளது.
3. மனுதாரர் திரு.P.சோழராஜன் அவர்களின் புகார்கள் அனைத்திற்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கட்டிட அனுமதி நகல் வேண்டி (Calling for Approved Plan Notice) தாக்கீது 26.07.2023 அன்று வழங்கப்பட்டது. இதன் தொடர் நடவடிக்கை மற்றும் CMDA Enforcement Cell (South-II) வழங்கிய கடிதத்தின்படி கட்டிட அனுமதி நகல் மற்றும் ஆவணங்களை பெற கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதின் அடிப்படையில் Lock & Seal & Demolision Notice 17.10.2023 அன்று வழங்கப்பட்டது, இத்தாக்கீதை எதிர்த்து பள்ளி நிர்வாகத்தினர் 15.12.2023 "தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி கழகத்தின் (HUD) மேல்முறையீடு செய்யப்பட்டதின் அடிப்படையில் நகர்ப்புற வளர்ச்சி கழகத்திற்கு 14.06.2024 அன்று பதில் அனுப்பப்பட்டது, இதன் தொடர்ச்சியாக HUD ORDER 28.01.2025 அன்று பெறப்பட்டது, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி கழகத்தின் ஆணையில் (CONFIRM THE GENUNITY OF THE APPROVED PLAN) பள்ளி கட்டிட அனுமதி வரைப்படத்தின் உண்மை தன்மையை பற்றி கேட்கப்பட்டுள்ளதால் திரு.வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் சிட்டலப்பாக்கம் ஒன்றிய அலுவலகம் மற்றும் திரு.ஆணையர் அவர்கள் புனித தோமையார் மலை நகராட்சி அலுவலகதிற்கு

கடிதம் அனுப்பப்பட்டு கட்டிட அனுமதியின் உண்மை வரைப்படத்தின் நகல்கள் பெற்று ஆவணங்களின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

4. மண்டலம்–14, கோட்டம்–181 கொட்டிவாக்கம் லட்சுமணன் பெருமாள் நகரில் உள்ள நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் ராமச்சந்திர பப்ளிக் பள்ளி குறைவான சொத்துவரி உள்ளதாக திரு.சோழராஜன் அளித்த புகாரின் அடிப்படையில் மேற்கண்ட பள்ளி கட்டிடத்தை கள ஆய்வு செய்து கட்டிடம் கட்டப்பட்ட நாள் மற்றும் கட்டிட அனுமதி வரைபடம் கேட்டு மூன்று நினைவூட்டு கடிதங்கள் அளித்தும் உரிய பதில் அளிக்காத காரணத்தால் மன்ற தீர்மானம் எண்:292/2018 நாள்:10.04.2018ன்படி 2/2017–18 முதல் திருத்தி அமைக்கப்பட வேண்டும் இல்லை என்றால் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு பற்றிய விவரம் உறுதி செய்யப்பட்டு சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட வேண்டும், என்ற தலைமை அலுவலகத்தின் அறிவுரையின்படி 2/2017–18ம் ஆண்டு முதல் சொத்து வரி மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ:2,47,665/–லிருந்து ரூ:2,60,280/– என சொத்து வரி மறு நிர்ணயம் 2/2017–18 முதல் செய்யப்பட்டுள்ளது, 1/2025–2026 வரை நிலுவை சொத்து வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

2. ராமச்சந்திர பப்ளிக் பள்ளிக்கு ரூ.79050/ லிருந்து ரூ.1,69,285/ என சொத்து வரி மறு நிர்ணயம் 2/2017–18 முதல் செய்யப்பட்டுள்ளது, 1/2025–2026 வரை நிலுவை சொத்து வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கொட்டிவாக்கம் லட்சுமணன் பெருமாள் நகரில் இயங்கி வருகின்ற 14–183–02321–000 நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கும் கொட்டிவாக்கம் ஜெகன்நாதன் தெருவில் இயங்கி வருகின்ற 14–183–11261–000 இராமச்சந்திரா பப்ளிக் பள்ளிக்கும் 10.09.2024 அன்று கள ஆய்வு செய்யப்பட்டு சொத்து வரி 2/2017–18 முதல் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என பணிந்து சமர்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் உதவி வருவாய் அலுவலரின் அறிக்கை, மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

சென்னை–600 008, எண் 22/488 பாந்தியன் சாலையில் இயங்கும் நெல்லை தூத்துக்குடி நாடார் மகமை பரிபாலன சங்கம் மற்றும் சங்கத்தால் கொட்டிவாக்கத்தில் நடத்தப் பெறும் இரண்டு பள்ளிகளில், நெல்லை நாடார் மெட்ரிக்குலேஷன் பள்ளிக்கு மட்டும் ஒரு மாடிக்கு பஞ்சாயத்தில் அப்ரூவல் பெற்றதும், பின்னர் சென்னை மாநகராட்சி மற்றும் CMDA அலுவலகத்தில் எவ்வித கட்டிட வரைபடம் பில்டிங் பிளான் அப்ரூவல் இல்லாமல் 4000 மாணவர்கள் படிக்கும் பள்ளி கட்டிடத்தின் மீது மேலும் ரெண்டு மாடி கட்டிடம் கட்டியும் கட்டிடத்தை சுற்றி 20 அடி இடைவெளி விடாமலும் மற்றும் பெரிய செட் அமைத்தது குறித்து CMDAக்கு விரிவான புகார் பெருநகர வளர்ச்சி குழுமத்தில் அளிக்கப்பட்டது என்பதும், CMDA–ஆல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 அலுவலருக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு, இதுநாள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், மேலும், 2017ம் ஆண்டு ராமச்சந்திரன் பப்ளிக் பள்ளி (CBSC) கட்டிடத்திற்கு CMDA அலுவலகத்திலும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்திலும் எவ்வித பில்டிங் அப்ரூவலும் வாங்காமல் 4 மாடி கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்பதும், இக்கட்டிடத்திற்கு லிப்ட்டும் அனுமதியில்லாமல் அமைத்துள்ளார்கள் என்பதும், அதனால் ஏதேனும் விபத்து நேரிட்டால் மாணவர்கள்

பாதிக்கப்படுவார்கள் என்பதும், 6 மாத வரியாக சுமார் ரூ.3,06,221/– 2005 ஆம் ஆண்டு முதல் கட்டாமல் இருந்து வருகிறார்கள் என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் CMDA அலுவலகத்திற்கு பல லட்சங்கள் சேர வேண்டிய வளர்ச்சி கட்டணத்தை செலுத்தாமலும் உள்ளார்கள் என்பதும், தன் மனு மீது நடவடிக்கை எடுக்காத மாநகராட்சி அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும், தரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பெரிய செட் மற்றும் பள்ளி மேல் மாடியில் அமைக்கப்பட்டுள்ள செட் ஆகியவற்றை அப்புறப்படுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்கும்படி கோரியுள்ளது மனுதாரர் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

கோட்டம்–181, மண்டலம் 14–ல் கொட்டிவாக்கம் பகுதியில் நெல்லை நாடார் சங்க பள்ளி வளாகத்தில் கடந்த 2005 ஆம் ஆண்டு பஞ்சாயத்து காலத்தில் கட்டிட அனுமதியுடன் பிளாக் A, பிளாக் B, பிளாக் C, மற்றும் பிளாக் D என கட்டிடங்கள் கட்டப்பட்டது என்பதும், இது குறித்து 26.07.2023 அன்று கட்டிட அனுமதி நகல் வேண்டி தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், பள்ளி வளாகத்தின் நடுவில் காம்பவுண்ட் சுவர் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ளது என்பதும், அனுமதி வாங்கி கட்டப்பட்ட பள்ளி கட்டிடத்தில் பிளாக் A மற்றும் பிளாக் D என இரண்டு கட்டிடத்தின் மூன்றாம் தளம் அனுமதி இல்லாமல் தற்காலிக இரும்பிலான கூரை கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்கூறிய அனைத்து புகார்களுக்கும் 17.10.2023 அன்று Lock & seal and Demolition தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதும், இந்த தாக்கீதை எதிர்த்து பள்ளி நிர்வாகம் 15.12.2023 அன்று தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி கழகத்தில் (HUD) மனு அளித்து, இதுகுறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, 28.01.2025 நாளிட்ட கடிதத்தில் பள்ளிக் கட்டிடத்தின் வரைபடத்தின் உண்மை தன்மையை உறுதி செய்து கொள்ளுமாறு தெரிவித்துள்ளதால், சிட்லபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் புனித தோமையார்மலை நகராட்சி ஆணையாளர் ஆகிய அலுவலகங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், பெறப்படும் அறிக்கையின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியால் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், சொத்துவரி குறித்து, கொட்டிவாக்கம் லட்சுமணன் பெருமாள் நகரில் இயங்கி வருகின்ற நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தின் வரிவிதிப்பு எண் 14–183–02321–000 மற்றும் கொட்டிவாக்கம் ஜெகன்நாதன் தெருவில் இயங்கி வருகின்ற இராமச்சந்திரா பப்ளிக் பள்ளி கட்டிடத்தின் வரிவிதிப்பு எண் 14–183–11261–000 ஆகியவற்றை 10.09.2024 அன்று கள ஆய்வு செய்யப்பட்டு, நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.2,47,665/–லிருந்து ரூ:2,60,280/– என சொத்து வரி மறு நிர்ணயம் 2/2017–18 முதல் செய்யப்பட்டு, 1/2025–2026 வரை உள்ள நிலுவை சொத்து வரியையும் மற்றும் ராமச்சந்திர பப்ளிக் பள்ளிக்கு ரூ.79050/– லிருந்து ரூ.1,69,285/ என சொத்து வரி மறு நிர்ணயம் 2/2017–18 முதல் செய்யப்பட்டு, 1/2025–2026 வரை நிலுவை சொத்து வரி வசூல் செய்யப்பட்டுள்ளது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14–ன் மண்டல உதவி வருவாய் அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், கொட்டிவக்கம் லட்சுமணன் பெருமாள் நகரில் இயங்கி வருகின்ற நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் திட்ட அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் கொட்டிவாக்கம் ஜெகன்நாதன் தெருவில் இயங்கி வருகின்ற இராமச்சந்திரா பப்ளிக் பள்ளியில் திட்ட அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து, Lock & seal and Demolition தாக்கீது வழங்கப்பட்டதை எதிர்த்து பள்ளி நிர்வாகம் மேல்முறையீடு செய்ததில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, 28.01.2025 தேதியிட்ட பள்ளி கட்டிட அனுமதி வரைப்படத்தின் உண்மைத் தன்மையை பற்றி உறுதி செய்து கொள்ளுமாறு ஆணையிட்டுள்ளதால், சிட்லபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் புனித தோமையார்மலை நகராட்சி ஆணையாளர் ஆகிய அலுவலகங்களுக்கு அறிக்கை கோரப்பட்டு அவ்வறிக்கையின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், கொட்டிவாக்கம் லட்சுமணன் பெருமாள் நகரில் இயங்கி வருகின்ற நெல்லை நாடார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும்

கொட்டிவாக்கம் ஜெகன்நாதன் தெருவில் இயங்கி வருகின்ற இராமச்சந்திரா பப்ளிக் பள்ளி ஆகியவற்றிக்கு 2017-18 முதல் சொத்துவரி மறு நிர்ணயம் செய்யப்பட்டு, 2025–26 முதல் அரையாண்டு வரை நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டுள்ளது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவி வருவாய் அலுவலர் தன்னுடைய அறிக்கையிலும், இளநிலை பொறியாளர் தனது வாக்குமூலத்திலும் தெரிவித்த இருந்த போதிலும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 28.01.2025 நாளிட்ட அரசு கடிதம் எண்.6236495/UD-VII(1)/2023–3–ல் ஆணையிட்டுள்ள நிபந்தனைகளின்படி உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கையினை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 14–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. P. சோழராஜா,
கதவு எண் 129/101
வடக்கு ரெட்ஹில்ஸ் ரோடு,
வில்லிவாக்கம்,
சென்னை–600 049.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

(3) மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 6/64 புழுதிவாக்கம் பிரதான சாலை
சென்னை 600 091

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

1/12/25
செயலாளர்.

1.12.25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032